தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 037/ந/2022
நாள்.09.05.2022

திருமதி.M.பாப்பா,
ஆம்பூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
ஆம்பூர் நகராட்சி. – எதிர்மனுதாரர்

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர், கட்டைமேடு 3வது தெரு, கதவு எண்.68, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.M.பாப்பா, என்பவரின் 28.03.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.03.2022 அன்று பெறப்பட்டு 037/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர், கட்டைமேடு 3வது தெரு, கதவு எண்.68, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.M.பாப்பா, என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 28.03.2022 நாளிட்ட தனது மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

> “நான் 30.06.2021–ல் ஓய்வு பெற்று சுமார் 8 மாதங்களுக்கு மேல் ஆகியும் இது நாள்வரை ஊதியத்தில் பிடித்தம் செய்த பங்களிப்பு ஓய்வூதிய சந்தா தொகை மற்றும் நிர்வாகப்பங்குத் தொகை வழங்கப்படவில்லை. நான் ஓய்வு பெற்ற நாள் முதல் சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் பிள்ளை வைத்து மிகவும் கஷ்டப்பட்டு வருகிறேன். என் குடும்பத்தை காப்பாற்ற ஊதியத்தில் பிடித்தம் செய்த பங்களிப்பு ஊதியம் மற்றும் நிர்வாக பங்குத்தொகை மற்றும் வட்டித்தொகை சேர்த்து வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.04.2022 நாளிட்ட கடிதம் மூலம் ஆம்பூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

“ஆம்பூர் நகராட்சி ஆணையர் தனது 27.04.2022 நாளிட்ட அறிக்கையில் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்:

மனுதாரர் திருமதி.எம்.பாப்பா அவர்களின் பங்களிப்பு ஓய்வூதியம் அனுமதித்தல் தொடர்பான முன்மொழிவு ஆணையர், கருவூல கணக்கு ஆணையரகம், சென்னை அவர்களுக்கு 03.01.2022–ம் தேதி அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்படி ஓய்வுபெற்ற பணியாளர் திருமதி.எம்.பாப்பா அவர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்து செலுத்தப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியத் தொகை 03/2021 முதல் 06/2021 வரை இணையதளத்தில் பதிவேற்றம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் சான்றொப்பத்துடன் கோப்பினை அனுப்பி வைக்குமாறு தெரிவித்து ஆணையர், கருவூல கணக்கு ஆணையரகம், சென்னை அவர்களால் 31.03.2022 ஆம் தேதி அசல் மனு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்படி 2021–2022 ஆம் ஆண்டு பங்களிப்பு ஓய்வூதிய சான்று பெற 25.04.2022 ஆம் தேதி உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு கோப்பு அனுப்பிவைக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் சான்று பெறப்பட்ட உடன் உரிய முன்மொழிகள் ஆணையர், கருவூல கணக்கு ஆணையரகம், சென்னை அவர்களுக்கு கோப்பு மீள அனுப்பிவைக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரர் திருமதி.எம்.பாப்பா மற்றும் எதிர்மனுதாரரான ஆம்பூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை இம்முறைமன்றத்தில் 28.04.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.04.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திருமதி.எம்.பாப்பா, 28.04.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

“ஆம்பூர் நகராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணியாற்றி கடந்த 30.06.2021–ல் ஓய்வு பெற்றுவிட்டேன். ஓய்வுக்கு பின்னர் எனக்கு சேரவேண்டிய பணப்பயன்களான பங்களிப்பு ஓய்வூதியத் தொகை எனக்கு இன்னும் வழங்கப்படவில்லை. எனவே, எனது குடும்ப நிலையை கருத்தில்கொண்டு எனக்கு மேற்கண்ட பணப்பயன்கள் கிடைத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(5) ஆம்பூர் நகராட்சி ஆணையர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோர் 28.04.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

“மனுதாரர் திருமதி.எம்.பாப்பா என்பவர் கடந்த 30.06.2021 அன்று ஓய்வு பெற்றுவிட்ட நிலையில் அவருக்கு சேரவேண்டிய பணப்பயன்களில் ஒன்றான பங்களிப்பு ஓய்வூதியத் தொகை குறித்த சான்றினை பெறும்பொருட்டு, 03.01.2022 அன்று ஆணையர், கருவூல கணக்குத் துறைக்கும் 25.04.2022 அன்று உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறைக்கும் கோப்பு அனுப்பப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் சான்று பெறப்பட்டவுடன் உரிய முன்மொழிவுகளுடன்

கருவூல கணக்கு ஆணையரகத்தில் கோப்பு மீள அனுப்பப்படும் என்பதையும், இதனை உடனுக்குடன் கண்காணித்து, மனுதாரரின் கோரிக்கை ஒரு மாத காலத்திற்குள் நிறைவேற்றப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், ஆம்பூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் திருமதி.எம்.பாப்பா அவர்கள் 30.06.2021ல் ஓய்வு பெற்ற நிலையில் அவருக்கான பங்களிப்பு ஓய்வூதியத் தொகை வழங்குவதற்கான நடவடிக்கை தாமதமாக ஜனவரி 2022ல் தான் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆரம்ப நடவடிக்கைகளுக்கு ஆறு மாத காலம் தாமதம் செய்த நகராட்சி அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும், ஓய்வு பெறும் பணியாளர்களுக்கான ஓய்வுகால பலன்கள் தாமதமின்றி குறித்த காலத்தில் பயனாளருக்கு கிடைத்திடும் பொருட்டு அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பி வைத்திடுமாறும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் ஓய்வூதியர்களின் ஓய்வுப் பலன்கள் தொடர்பான உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் நடவடிக்கைகளை தாமதமின்றி விரைந்து நடவடிக்கை எடுத்திட உள்ளாட்சி நிதி தணிக்கை துறை இயக்குநர் அவர்களை இம்முறைமன்றம் கேட்டுக்கொள்கிறது,

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.எம்.பாப்பா
   கதவு எண்.68, கட்டைமேடு 3வது தெரு, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம் 635 802.
2) ஆணையாளர், ஆம்பூர் நகராட்சி.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.
4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.
5) இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை,
   571, அண்ணாசாலை, நந்தனம், சென்னை 600 035.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

10.05.22

செயலாளர்.

10/05/22